# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ்
## பள்ளிவாயிலில் 06.01.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

*நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருள்களிலிருந்து இறைவழியில் செலவு செய்யாத வரையில் உங்களால் ஒருபோதும் முழுமையான நன்மையினைப் பெற முடியாது. நீங்கள் எப்பொருளைச் செலவு செய்கின்றீர்களோ அதனை நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிகின்றான். (3:93)*

இந்த வசனத்தில் வருகின்ற *பிர்* என்ற சொல் உயர்வான நன்மைக்கும் கூறப்படும். முழுமையான நன்மைக்கும் கூறப்படும்.

அல்லாஹ்வின் திருப்தியைத் தேடிக் கொண்டிருக்கும் ஓர் உண்மையான நம்பிக்கையாளர் இறைவனுக்கு அருகில் அவரைக் கொண்டு செல்லக்கூடிய நன்மையின் அந்த தரத்தைப் பெற முயற்சி செய்கின்றார். அவ்வாறு முயற்சி செய்யவும் வேண்டும்.

திருக்குர்ஆனில் எங்கு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்காக பல்வேறு கோணங்களில் பல்வேறு நன்மைகளைப் பற்றி கூறப்பட்டுள்ளதோ, அதைச் செய்வதன் பக்கமும் கவனமூட்டப்பட்டுள்ளதோ, அங்கு இறைவழியில் தனது செல்வத்தைச் செலவு செய்வதையும் தனது பல்வேறு ஆற்றல்களை இறைவழியில் செலவு செய்வதையும் நன்மை என்று கூறப்பட்டுள்ளது.

இந்த வசனத்திலும் இறைவழியில் செலவு செய்வதை மிகப்பெரும் நன்மையாகக் கூறப்பட்டுள்ளது. எந்த செல்வம் அல்லது பொருளின் மீது உங்களுக்கு நேசம் உள்ளதோ அதை நீங்கள் இறைவழியில் செலவு செய்தால் அது பெரும் நன்மையாகும் என கூறப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக செய்யப்படும் ஒவ்வொரு நன்மைக்கும் அல்லாஹ் நற்கூலி வழங்குகின்றான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால், சிறந்த பொருளை இறைவழியில் செலவு செய்யும் போதுதான் அதற்கான சிறந்த நற்கூலி கிடைக்கின்றது. ஓர் அடியான் இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக நன்மைகளின் உயர்வான தரத்தைப் பெறுவதற்கு முயல்வாரோ, இறை திருப்தியைப் பெறுவதற்காக தனக்கு மிகவும் பிரியமான, தனக்கு மிகவும் நேசத்திற்குரிய பொருளை இறைவழியில் கொடுப்பதற்கு தயங்கமாட்டாரோ அப்படிப்பட்ட அடியாரைத்தான் இறைவன் மிகவும் விரும்புகின்றான்

உண்மையான ஈமான், உண்மையான நன்மை மற்றும் தியாகத்தின் உயர்வான தரம் தனக்கு எல்லாவற்றையும் விட மிகவும் பிரியமான பொருளை இறைவழியில் செலவு செய்யும்போது தான் தெரிய வரும். ஈமானின் வலிமைக்காகவும் அதை பாதுகாப்பதற்காகவும் எல்லா விதமான தியாகத்திற்கும் ஒரு நம்பிக்கையாளர் தயாராக இருக்கின்றார். ஓர் உண்மையான நம்பிக்கையாளர் அவ்வாறு தயாராக இருக்க வேண்டும். நன்மைகளின் உயர்வான தரத்தைப் பெறுவதற்காக எல்லா சமயத்திலும் ஓர் உண்மையான நம்பிக்கையாளர் நிம்மதியிழந்து இருப்பார். நபிமொழியில் இவ்வாறு வருகிறது.

இந்த வசனம் இறங்கிய போது ஒரு நபித்தோழரான அபூ தல்ஹா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து நான் எனக்கு மிகவும் பிடித்தமான பிர்ருஹா என்ற பெயரால் அறியப்படுகின்ற எனது தோட்டத்தை அல்லாஹ்வின் வழியில் கொடுத்து விடுகின்றேன் என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் மகிழ்ச்சி எனக் கூறினார்கள். பிறகு அதை எவ்வாறு செலவு செய்ய வேண்டும் என்றும் கூறினார்கள்.

எப்போது நன்மைக்கான கட்டளை நமக்கு கூறப்படும்? மேலும் அதை நாம் நிறைவேற்றுவதற்காக ஈமானுடனும், மனத்தூய்மையுடனும், ஆழ்ந்த பற்றுடனும் நாம் எவ்வாறு நமது தியாகத்தை வெளிப்படுத்த முடியும்? என்ற துடிப்புடன் சஹாபாக்கள் எப்போதும் இருந்து வந்தார்கள். அல்லாஹ்வின் வழியில் செலவு

செய்யக்கூடியவர்கள் மிகுந்த நற்பாக்கியம் பெற்றவர்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இத்தகைய உயர்வான தரத்தைப் பெறக்கூடியவர்களாக இருந்த எண்ணற்ற சஹாபாக்களை நாம் பார்க்கின்றோம். அவர்கள் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்தார்கள். அதன் மூலம் அல்லாஹ் ஒரு நம்பிக்கையாளரிடம் விரும்புகின்ற அந்த உயர்வான தரத்தை அவர்கள் அடைய விரும்பினர். தியாகங்கள் செய்வதற்கான அவர்களது நல்லெண்ணத்தையும் இறைவன் அறிந்திருந்தான். பிறகு அல்லாஹ் அவர்களுக்கு அளவில்லாமல் வழங்கினான். அவர்களில் சாதாரண வேலைகளைச் செய்து கொண்டிருந்தவர்களை ஒரு சமயத்தில் அவன் கோடிக்கணக்கான செல்வங்களுக்கு எஜமானராக ஆக்கி விட்டான். பொருளாதாரத்தில் ஏற்பட்ட இந்த விரிவான நிலை அவர்களது ஈமானிலும், நிச்சய உறுதியிலும் மேலும் ஒளியூட்டக்கூடியதாக இருந்தது. அவர்களிடத்தில் வந்து சேர்ந்த செல்வத்தையும் சொத்தையும் எவ்வித அச்சமும் பயமும் இன்றி சிறிதும் தயங்காமல் அவர்கள் இறைவழியில் செலவு செய்து கொண்டே இருந்தார்கள். அவர்களுக்கு இதைப் பற்றிய அறிவும், ஞானமும் இருந்தது. அதாவது அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யும் போது அல்லாஹ் அளவில்லாமல் வழங்குவான். 700 மடங்கு அல்லது அதை விட அதிகமாக வழங்குவான் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அல்லாஹ் யாருக்கும் கடன் வைப்பதில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களிடம் ஏற்படுத்திய ஆன்மீகப் புரட்சியின் விளைவாக, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அதிகமதிகம் நாம் முயற்சி செய்ய வேண்டும் என்று அவர்கள் கருதினார்கள். இதுவே அவர்களது நோக்கமாக இருந்தது. இதற்காகவே அவர்கள் பெரும் முயற்சி செய்து வந்தனர்.

சஹாபாக்களின் வாழ்க்கை இந்த விஷயத்திற்கு சாட்சியாக இருக்கின்றது. எதற்காக அவர்கள் முயற்சி செய்தனரோ அந்த நோக்கத்தை அவர்கள் அடைந்தார்கள். அல்லாஹ் அவர்களிடம் திருப்தி அடைந்ததற்கான சான்றிதழை அவர்கள் பெற்றார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த சஹாபாக்கள் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்:**

சஹாபாக்கள் மிகவும் எளிதாக இந்தத் தகுதியை அடைந்தனரா என்ன? உலகப் பட்டங்களைப் பெறுவதற்காக எந்த அளவு செலவுகளையும், துன்பங்களையும் சகித்துக் கொள்ள வேண்டியது வருகிறது? இதை கடந்து தான் உள்ளத்திற்கு நிம்மதியையும் திருப்தியையும் தராத சாதாரண ஒரு பட்டம் ஒருவருக்கு கிடைக்கின்றது. பிறகு உள்ளத்திற்கு ஆறுதலையும் நிம்மதியையும் தரக்கூடிய, கருணைமிக்க எஜமானனின் திருப்திக்கான அடையாளமாக இருக்கும். ரலியல்லாஹு அன்ஹு அதாவது அல்லாஹ் அவர்களிடத்தில் திருப்தி அடைந்தான் என்ற பட்டம் மிகவும் எளிதாக அவர்களுக்கு கிடைத்து விட முடியுமா?

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

உண்மையான மகிழ்ச்சிக்குக் காரணமாக இருக்கின்ற இறைவனுடைய திருப்தியானது; தற்காலிகத் துன்பங்களைக் சகித்துக் கொள்ளாத வரை ஒருவருக்கு கிடைக்க முடியாது.

இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக துன்பங்களைப் பற்றி கவலை கொள்ளாமல் இருக்கின்ற மக்கள் அருளுக்குரியவர்களாக இருக்கின்றார்கள். ஏனென்றால் நிரந்தரமான மகிழ்ச்சி மற்றும் நிரந்தரமான சுகத்தின் வெளிச்சம் ஆகியவை அந்த தற்காலிக துன்பங்களுக்கு பிறகுதான் ஒரு நம்பிக்கையாளருக்கு கிடைக்கும்.

இந்தக் காலத்தில் உலகத்தின் சீர்திருத்தத்திற்காக, உலகத்தை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்வதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பினான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சஹாபாக்களின் உதாரணத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள். இதை அவர்கள் எடுத்துக் கூறுவதற்கான காரணம் இந்த தூய முன்மாதிரிகளை நாம் பின்பற்றுவதற்காகவே ஆகும். எனவே இவர்களது பாதங்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்ல முயற்சி செய்யுங்கள். அவ்வாறு முயற்சி செய்தால் உண்மையான நன்மைகளைச் செய்பவர்களாகவும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவர்களாகவும் நாம் ஆக முடியும்.

பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றை நாம் பார்க்கின்ற போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நேரடியான தர்பிய்யத் மூலமாக அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக தன்னிடமுள்ள அனைத்தையும் தியாகம் செய்வதற்கு தயாராக இருந்த ஆயிரக்கணக்கான நபர்களை உலகிற்கு காட்டினார்கள். இந்த ஈமானின் வெப்பம் மற்றும் தியாகங்கள் மூலமாக ஜமாஅத் ஒவ்வொரு நாளும் ஒரு புதிய மகிமையுடன் முன்னேற்றத்தின் இலக்குகளைக் கடந்து சென்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்திலும் இவ்வாறுதான் நடந்தது.

எந்த மக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நட்பைப் பெற்றார்களோ அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்தத் தூதுச் செய்தியை நன்றாகப் புரிந்து கொண்டார்கள். அதாவது நன்மையின் வாசல் மிகவும் நெருக்கடியானது என்பதே அந்த தூதுச் செய்தி.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)அவர்கள் கூறுகின்றார்கள்:**

நன்மையின் வாசல் நெருக்கடியானது. அற்பமான பொருள்களைச் செலவு செய்வதன் மூலம் யாரும் இந்த வழியாக நுழைய முடியாது என்பதை நன்றாக மூளையில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால், எதுவரையில் உங்களுக்கு மிகவும் பிரியமான, மிகவும் நேசத்திற்குரிய பொருளைச் செலவு செய்யாத வரை இறைவனுடைய நேசராகவும் அவனுக்குப் பிரியமானவராகவும் ஆகின்ற தகுதி கிடைக்க முடியாது என்பது தெளிவான இறைவாக்கு ஆகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்கள் இந்த விஷயத்தை அறிந்து கொண்ட பிறகு தியாகங்கள் செய்வதற்காக நிம்மதியிழந்து இருந்தார்கள். நன்மைகளின் உயர்வான தரத்தை அடைவதற்காக அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் துஆவிற்காக வேண்டினார்கள். அதற்காக முயற்சிகளை செய்து வந்தார்கள். பிறகு அல்லாஹ்வின் அருள்களின் காட்சிகளையும் பார்த்தார்கள். இங்கு நான் இதற்கான ஒரு சில உதாரணங்களை உங்கள் முன்னால் வைக்கின்றேன்.

**ஹஸ்ரத் சூஃபி நபி பக்ஸ் சாஹிப் (ரலி) முஹாஜிர் காதியான் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஒருமுறை நான் ஆண்டு மாநாட்டிற்குச் சென்றிருந்தேன். அப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் நான் தனிமையில் உங்களிடம் சிலவற்றைக் கூற விரும்புகின்றேன் என்று கூறினேன். அதைக் கேட்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உள்ளே வாருங்கள் என்று கூறினார்கள். தற்செயலாக அந்த அறையின் வாசல் திறந்திருந்தால் எனது தோழர்களும் மற்ற சில சகோதரர்களும் உள்ளே வந்து விட்டார்கள். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம், எனது தந்தையார், என்னைப் பற்றி ஒரு முறையீடு செய்கிறார் என்று கூறினேன். அதாவது மகனை நல்ல முறையில் படிக்க வைத்தேன். அவன் வேலையில் சேர்ந்த நாளிலிருந்து எங்களுக்கு எந்தத் தொண்டும் செய்யவில்லை என்று எனது தந்தையார் மேலும் கூறுகின்றார்கள். எனது மனைவி என்னிடம், நீங்கள் அஹ்மதியாதும் என்னிடம் இருந்த நகைகள் கூட விற்கப்பட்டு விட்டது என்று கூறினார். தந்தைக்கும் முறையீடு செய்யும் நிலை உள்ளது. மனைவியும் என்னிடம் இதுபற்றி முறையீடு செய்கின்றார். தொடர்ந்து அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறினார்கள்.

இங்கு நான் பார்க்கின்றேன். இந்த இயக்கத்திற்காக தொண்டாற்றுவதற்காக உங்களது சீடர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களைத் தியாகம் செய்கின்றனர். அல்லாஹ் எனக்கு இரு மடங்கு, மூன்று மடங்கு சம்பளம் வழங்கவும் அதன் மூலமாக நான் உங்களுக்கு தொண்டு செய்யவும் தாங்கள் துஆ செய்யுங்கள் என்று நான் கூறினேன்.

ஒருபுறம் தந்தையார் நான் இவரை படிக்க வைத்தேன். ஆனால், இவர் எனக்கு தொண்டு செய்யவில்லை என்று முறையீடு செய்கிறார். மறுபுறம் மனைவி எனக்கு நீங்கள் எதுவும் கொண்டு வந்து தராமல் இருக்கின்றீர்கள். அதன் காரணமாக எனக்கு எனது நகைகளை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது என்று முறையீடு செய்கின்றார். ஆனால், இங்கு நடக்கின்ற நன்மையான காரியங்களைப் பார்க்கும் போது, உங்களிடம் வருகின்றவர்கள் செய்யும் தியாகங்களைப் பார்க்கும் போது அதாவது மக்கள் உங்களிடம் வந்து

ஆயிரக்கணக்கான ரூபாய்களை வழங்கி விட்டுச் செல்வதைப் பார்க்கும் போது எனக்கும் அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவதற்காக தாங்கள் துஆ செய்யுங்கள் என்று அவர், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறினார்.

இந்த விஷயங்களைக் கேட்டு விட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், நல்லது நாம் துஆ செய்வோம். நீங்கள் நினைவூட்டிக் கொண்டிருங்கள் என்று கூறினார்கள். இந்த சஹாபி கூறுகின்றார்கள்:

அப்போது எனது மாத சம்பளம் 55 ரூபாயாக இருந்தது. பிறகு நான் லாஹூர் சென்ற போது துஆவிற்காக நினைவூட்டியவாறு ஒரு கடிதத்தை ஹுஸூர் அவர்களுக்கு எழுதினேன். இந்த காலக்கட்டத்தில் எனக்கு உகாண்டன் இரயில்வே தரப்பிலிருந்தும் 120 ரூபாய் மாத சம்பளமும் 45 ரூபாய் அலோவன்ஸும் கிடைக்கின்ற ஒரு வேலை கிடைத்தது. எனக்கு முதலாவது சம்பளம் கிடைத்த உடனேயே நான் ஹுஸூர் அவர்களுக்கு முன்னால் எனது உள்ளத்தில் நினைத்திருந்த அந்தக் காணிக்கையை வைத்தேன். அதாவது ஜமாஅத்திற்கு செலவு செய்வதற்காக சிறு தொகையை வழங்கினார்.

பிறகு கூறுகின்றார்கள்: இதற்குப் பிறகு நான் ஆப்பிரிக்கா சென்று விட்டேன். நான் அங்கிருந்த வரை எனக்கு மூன்று மடங்கு அதிகமாக சம்பளம் கிடைத்து வந்தது. இது அவர்களது துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதன் அற்புதமாகும்.

பிறகு ஓர் சஹாபியான முன்ஷி ஸஃபர் அலி சாஹிப் அவர்கள் மியான் முஹம்மது அஹ்மது சாஹிப் அவர்கள் மூலமாக அறிவிக்கின்றார்கள்:

மர்ஹூம் சவுத்ரி ருஸ்தம் அலி சாஹிப் அவர்கள் இரயில்வே இன்ஸ்பெக்டராக இருந்து வந்தார். அவர்களுக்கு 150 ரூபாய் மாத சம்பளமாக கிடைத்து வந்தது. மிகத் தூய உள்ளம் படைத்த அவர் நமது ஜமாஅத்தைச் சார்ந்தவராகவும் அவரைப் பற்றி பிறரிடம் எடுத்துக்கூறும் வகையிலுள்ள உயர் தகுதியினைப் பெற்றவராகவும் இருந்தார். அவர் தனது செலவுக்காக அதாவது தனது வீட்டிலுள்ளவர்களின் செலவுக்காக 20 ரூபாயை மட்டும் வைத்துக் கொண்டு தனது சம்பளத்தில் மீதமிருந்த தொகை முழுவதையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அனுப்பி வைத்து விடுவார். இது எப்போதுமே அவரது வழிமுறையாக இருந்து வந்தது.

பிறகு பாருங்கள். மார்க்கத்திற்காக தொண்டாற்றுவதற்காகவும் தியாகங்கள் செய்வதற்காகவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஏழைகளின் உள்ளத்தில் அதற்கான ஆர்வத்தை ஏற்படுத்தி இருந்தார்கள். அவர்களுக்கும் அதற்கான துடிப்பு இருந்து வந்தது. எவர்களுக்கு எவ்வித வருமானமும் இல்லாமல் இருந்ததோ, ஏழ்மை இருந்ததோ, அவர்களுக்குப் பிள்ளைகள் அதிகமாக இருந்ததால் முழுமையாக அவர்களுக்காக செலவு செய்ய முடியாமல் இருந்ததோ அவர்கள் எப்படிப்பட்ட தியாகங்கள் செய்துள்ளனர் என்பதைப் பாருங்கள்.

ஹஸ்ரத் காஸி கமருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் ஸாயீன் தீவான் ஷா சாஹிப் பற்றிய சில சம்பவங்களைக் கூறிவிட்டு இவ்வாறு கூறுகின்றார்கள்:

நான், ஸாயின் சாஹிப் அவர்களிடம் நீங்கள் ஏதாவது முக்கியப் பணியைச் செய்வதற்காகவா காதியான் செல்கின்றீர்கள்? என்று ஒருமுறை கேட்டேன்.

ஸாயீன் சாஹிப் இவரது கிராமத்தைக் கடந்து தான் காதியான் செல்ல வேண்டியதிருந்தது. அதனால் இந்தக் கிராமத்தில் தான் அவர்கள் இரவு நேரத்தைக் கழிப்பார்கள்.

ஸாயீன் தீவான் ஷா சாஹிப் அவர்கள் நோராவல் என்ற இடத்தில் வசித்து வந்தார்கள். இவர் இருந்த கிராமத்தைக் கடந்து தான் அவர்களுக்கு செல்ல வேண்டியது இருந்தது.

நோராவில் இருந்து நடந்தவாறு இவர்கள் காதியான் வருவார்கள். பல மைல் தூரத்தைக் கடக்க வேண்டியதிருந்தது. குறைந்தபட்சம் 100 மைல்கள் இருக்கலாம். அறிவிப்பவர் தொடர்ந்து கூறுகின்றார்:

காதியானிற்கு ஏதாவது முக்கியப் பணியைச் செய்வதற்காக செல்கின்றீர்களா அல்லது ஹுஸூரைச் சந்திக்கும் ஆர்வத்தில் செல்கின்றீர்களா? என்று நான் கேட்டேன். அதற்கு ஸாயீன் தீவான் ஷா சாஹிப் அவர்கள் நான் ஏழையாக இருப்பதால் என்னால் சந்தா கொடுக்க முடியாது. விருந்தினர் தங்கும் விடுதியிலுள்ள கட்டில்களின் கயிறுகளைப் பிண்ணுவதற்காக நான் செல்கின்றேன். அதன் மூலமாக எனது தலையிலிருந்து சந்தாவின் சுமை இறங்கி விடும் என்று கூறினார்கள்.

கட்டில்களின் கயிறுகளைப் பிண்ணுவதற்குக் கொடுக்கப்படும் கூலியைப் பெறாமல் சந்தா செலுத்துவதற்குப் பதிலாக இந்த ஊழியத்தைச் செய்து வந்தார்கள்.

இதுதான் இந்த மக்களின் தியாகங்களின் தரமாகும். இதற்கான ஒன்றிரண்டு உதாரணங்களை நான் கூறியுள்ளேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நட்பிலிருந்து பலன் பெற்றவர்களின் தரம் இதுவாகும். அறிவிப்புகளில் இதுபோன்ற எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன. ஆனால் காலத்தைக் கருத்தில் கொண்டு அவற்றில் ஒரு சிலவற்றை மட்டுமே கூறியுள்ளேன்.

மேலும் நான் இந்த விஷயத்தை எடுத்துக் கூற விரும்புகின்றேன். இந்த விஷயத்தால் நமது உள்ளம் அல்லாஹ்வை புகழ்வதில் நிரம்பி விட வேண்டும். முன்பை விட அதிகமாக நாம் அல்லாஹ்வின் முன்பு குனிந்து கொண்டே செல்ல வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியை உலகில் பறக்கச் செய்வதற்காக அல்லாஹ் இந்த ஜமாஅத்தை நிறுவியுள்ளான். ஜமாஅத்தில் இந்த தியாகங்களின் உயர்வான தரம், தனக்கு மிகவும் விருப்பமான பொருள்களை இறைவழியில் செலவு செய்வதற்கான தரம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபாக்களின் வாழ்க்கையுடன் மட்டும் முடிந்து விடவில்லை. அதிகபட்சம் ஒன்றிரண்டு தலைமுறை மட்டும் இது நீடிக்கவில்லை. மாறாக, 100 வருடத்திற்கும் அதிகமான காலகட்டம் கடந்த பிறகும் கூட தியாகங்கள் செய்வதில் உள்ள இந்த இன்பமும், ஆர்வமும் அல்லாஹ்வின் அருளால் நிலைத்திருக்கின்றது. மாறாக இதை விட அதிகமாக பல்வேறு நாடுகளைச் சேர்ந்த புதிதாக பைஅத் செய்து வருகின்ற அஹ்மதிகளிடம் தங்களது செல்வத்தை இறைவழியில் செலவு செய்வதில் ஒரு பேரார்வம் ஏற்பட்டிருப்பது தெரிய வருகிறது. இன்று உலகம் பௌதீக இன்பங்களுக்காகவும் வசதிகளுக்காகவும் தனது செல்வத்தை செலவு செய்கின்ற அல்லது செலவு செய்ய விரும்புகின்ற இந்தக் காலத்தில் அஹ்மதிகள் அதற்கு இரண்டாவது இடத்தை வழங்கி விட்டு முதலில் மார்க்கத்திற்காக தியாகங்கள் செய்து கொண்டே செல்கின்றனர். உலகத்தின் கண்களை திறப்பதற்காக அஹ்மதிகளின் இந்த தியாகங்கள் மட்டுமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உண்மையை நிரூபிப்பதற்குப் போதுமானதாகும். ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா மற்றும் எல்லா இடங்களிலும் தியாகங்கள் செய்கின்ற இந்த மக்களின் தியாகங்களின் காட்சியை நாம் பார்க்கின்றோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூதுச் செய்தியைப் புரிந்து அதனை முழுமையாக செயல்படுத்துவதற்கு இந்த மக்கள் முழுமையாக முயற்சி செய்கின்றார்கள்.

எதுவரை நாம் மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்கியவாறு இந்த முயற்சிகளைத் தொடர்ந்து செய்து வருவோமோ அதுவரை எந்த எதிரியாலும் நமது முடியைக் கூட அசைக்க முடியாது. இன்ஷா அல்லாஹ்.

நமது ஈமான் அதிகரிப்பதற்காக இன்றைய தியாகங்கள் தொடர்பான சில சம்பவங்களை நான் எடுத்துக் கூறுகின்றேன்.

இந்தியாவிலுள்ள நாஸிம் மால் வக்ஃபே ஜதீது அவர்களது அறிக்கையிலிருந்தும் முதலாவது சம்பவத்தை நான் எடுத்துள்ளேன். இந்த எளியவன் இன்ஸ்பெக்டர் வக்ஃபே ஜதீதாக சுற்றுப்பயணம் மேற்கொண்டவாறு கேரளாவிலுள்ள கருலாயி என்ற ஜமாஅத்திற்கு பட்ஜெட் தயார் செய்வதற்காக சென்ற சமயத்தில் ஒரு தூய உள்ளம் படைத்த சகோதரரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் கூறினார். நான் இப்போது புதிதாக பர்னிச்சர்கள் விற்கின்ற தொழிலை ஆரம்பித்துள்ளேன். வக்ஃபே ஜதீதில் எனது புது வருடத்திற்கான வாக்குறுதியாக நான்கு இலட்சம் ரூபாய் எழுதுங்கள். மற்ற சந்தாக்களையும் செலுத்திய பிறகு இதைத் தவிர

இந்த தொழிலில் என்ன இலாபம் கிடைத்தாலும் அதில் 10 சதவீதத்தை வக்ஃபே ஜதீத் சந்தாவில் அதிகமாக செலுத்துவேன் என்று அவர் கூறினார்.

அல்லாஹ் அருள் செய்தான். அவரது புதிய வியாபாரம் நடக்க ஆரம்பித்தது. தினந்தோறும் சம்பாதிக்கின்ற தொகையிலிருந்தும் அதற்குரிய சந்தா தொகையை தனியாக எடுத்து விட வேண்டும். அதற்கு தனியாக கணக்கு வைக்க வேண்டும் என்று அவர் தமது மனைவியிடம் கூறியிருந்தார். இறுதியில் முழு வருட இலாபத்தையும் கணக்கிட்டுப் பார்த்த போது அதில் ஐந்தரை இலட்சம் ரூபாய் வக்ஃபே ஜதீத் சந்தாவாக அவர் கொடுக்க வேண்டியதிருந்தது. அதை அவர் கொடுத்து விட்டார். மேலும் வரும் வருடத்தில் தனது தொழிலில் கிடைக்கும் இலாபத்திலிருந்து 10 சதவிகித தொகையை வக்ஃபே ஜதீத் சந்தாவாக கொடுப்பதற்குப் பதிலாக, அதிலிருந்து 25 சதவிகித தொகையை வக்ஃபே ஜதீத் சந்தாவாக நான் கொடுப்பேன் என்று அவர் வாக்குறுதி அளித்துள்ளார்.

**பிறகு இந்தியாவிலிருந்து வக்ஃபே ஜதீதின் இன்ஸ்பெக்டர் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:**

2011 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் வக்ஃபே ஜதீதின் புதிய பட்ஜெட்டினை தயார் செய்வதற்காகச் சென்றேன். இங்கு ஒரு பெண்ணுக்கு பொருள் தியாகம் பற்றி எடுத்துக் கூறியவாறு அஹ்மதி மற்றும் முஸ்லிம் பெண்களின் உயிர், பொருள் தியாகங்கள் தொடர்பான சம்பவங்களைக் கூறினேன். இதைக் கேட்ட அந்தப் பெண் தனது ஒரு மாத சம்பளத் தொகையை வாக்குறுதியாக எழுதினார். அந்தப் பெண் ஒரு சாதாரண ஆசிரியை ஆக பணிபுரிந்து வந்தார். தனது வாழ்நாளை நன்றாகக் கழிக்கும் வகையில் குறிப்பிடத்தக்க வகையில் எந்த வருமானமும் அவருக்கு இருக்கவில்லை. அவரது மாத சம்பளம் 5,000 ரூபாயாக இருந்தது. அவர் அந்தத் தொகையை வாக்குறுதியாக எழுதினார்.

கூறுகின்றார்கள்: நான் அவரது தந்தை இருந்த இன்னொரு இடத்திற்குச் சென்றேன். அவர்கள் ஜமாஅத்தின் தலைவராக இருந்தார்கள். அவரிடம் உங்களது மகள் பெரும் தியாகம் செய்துள்ளார் என்று நான் கூறினேன். இதைக் கேட்டு விட்டு மகிழ்ச்சியில் அவர் அழ ஆரம்பித்தார். மேலும் தனது மூத்த மகளை அழைத்து உனது சகோதரி இந்த அளவு தியாகம் செய்துள்ளார். நீங்கள் அவரை விட வயதில் பெரியவர். நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்? என்று கேட்டார். அவர்களது அந்த மகள் உடனடியாக தனது சகோதரியை விட ஆயிரம் ரூபாய் அதிகமாக தருவதாக வாக்குறுதி அளித்தார். நான் பெரியவளாக இருப்பதால் அதிகம் தருவேன் என்று கூறினார்.

சில வருடங்களுக்கு முன்னர் அஹ்மதிய்யத்தில் இணைந்த மக்களின் மனத்தூய்மையும் தியாகத்தின் உணர்வும் எப்படி இருக்கின்றது? என்று பாருங்கள்.

**மாலியின் அமீர் சாஹிப் கூறுகின்றார்கள்:**

நமது ஜமாஅத்தைச் சேர்ந்த ஒரு நண்பர் தராவரே சாஹிப் அவர்கள் யூனியன் கவுன்ஸிலில் பணிபுரிந்து வருகின்றார். இவர்கள் சந்தாக்களை முறையாக செலுத்துபவராகவும் பொருள் தியாகத்தில் முன்னணியில் நிற்பவராகவும் இருந்தார்.

இவர்கள் கூறினார்கள்: மக்கள் தொகை கணக்கெடுக்கும் பணிக்காக 32 நபர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. தொடர்ந்து பணியில் ஈடுபட்டிருக்க வேண்டும். ஒரு நாள் கூட விடுப்பு எடுக்கக் கூடாது என்று எங்களுக்கு கூறப்பட்டிருந்தது. இதற்காக 1 இலட்சம் பிராங்க்ஸிஃபா ஒவ்வொருவருக்கும் கூலியாக வழங்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது. இவர் அந்த உடன்படிக்கையை செய்த பிறகு பணி முடிய ஆறு நாட்களே எஞ்சியிருந்த நிலையில் இவரது பகுதியில் அதாவது கானா மண்டலத்திற்கான மாநாட்டின் நாட்கள் வந்தன. இவர் கூறுகின்றார்: ஜமாஅத்திடம் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்வேன். இந்த மாநாட்டில் என்னால் கலந்து கொள்ள முடியாது என்று நினைத்தேன். ஆனால் பிறகு எவ்வாறிருப்பினும் நான் ஜமாஅத் பணிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று எனது உள்ளம் முடிவெடுத்தது. இறைவனது பணிக்குதான் முதலிடம் வழங்க வேண்டும் என்று நான் உடன்படிக்கை செய்துள்ளேனே! ஒரு இலட்சம் பிராங்க்ஸிஃபா கிடைக்காமல் போனால் போகட்டும் என்று முடிவெடுத்தவாறு நான் எனது பணியை விட்டு விட்டு மாநாட்டிற்குச் செல்வதற்கு

தயாரானேன். எனது மற்ற நண்பர்கள் என்னைப் பழித்துரைக்க ஆரம்பித்தனர். இவ்வளவு பெரிய தொகையை வீணாக்கி விட்டு செல்கின்றீர்கள் என்று கூறினார்கள்.

**இவர்கள் கூறுகின்றார்கள்:**

மாநாடு முடிந்து ஒரு வாரம் கழித்து நான் திரும்பி வந்த போது அந்தப் பகுதியின் மேயர் என்னிடம் நீங்கள் செய்து கொண்ட உங்களது உடன்படிக்கைக்கு மாறு செய்தவாறு பணியை விட்டு விட்டு நீங்கள் சென்று விட்டீர்கள். ஆனால் எனது உள்ளத்தில் நீங்கள் இறைவனுக்காக சென்றுள்ளீர்கள் என்ற எண்ணம் வந்தது. எனவே உங்களுக்காக தனியாக நான் ஒரு இலட்சம் பிராங்க்ஸிஃபா வைத்துள்ளேன். இதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார்.

**தொடர்ந்து இவர்கள் கூறுகின்றார்கள்:**

இதற்குப் பிறகு துணை மேயர் என்னை அழைத்தார். அவர்தான் இந்தப் பணியைக் கண்காணிப்பவராக இருந்தார். அவரும் இதைத்தான் கூறினார். நீங்கள் இங்கிருந்து சென்று விட்டாலும் உங்களுக்குரிய தொகையைக் கொடுக்க வேண்டும் என்று எனது உள்ளத்தில் ஏன் தோன்றியது என்று எனக்குத் தெரியவில்லை. நான் இந்தத் தொகையை உங்களுக்காக வைத்திருந்தேன் என்று கூறி விட்டு அவரும் ஒரு இலட்சம் பிராங்க்ஸிஃபாவைக் கொடுத்தார். பிறகு இவரை கணக்குத்துறைத் தலைவர் தனது அலுவலகத்திற்கு வருமாறு அழைத்தார். அவரும் அவரிடம் ஒரு இலட்சம் பிராங்க்ஸிஃபா வழங்கியவாறு நீங்கள் இங்கு இல்லாமல் இருந்ததால் நான் உங்களுக்காக ஒரு இலட்சம் பிராங்க்ஸிஃபாவை தனியாக வைத்திருந்தேன். இதை வாங்கிக் கொள்ளுங்கள். ஆனால் யாருக்கும் இதுபற்றி சொல்ல வேண்டாம் என்று கூறினார். இவருக்கு இந்தத் தொகையினை வழங்கிய மூன்று பேருமே யாருக்கும் இதுபற்றி சொல்ல வேண்டாம் என்றே கூறினார்.

பிறகு இவர் தனது மற்ற நண்பர்களிடம் இதுபற்றி கேட்டபோது ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் தொகையிலிருந்தும் ஏதாவது ஒரு காரணத்திற்காக கொஞ்சம் தொகை பிடிக்கப்பட்டிருந்தது. இவர்களில் ஒருவருக்கு கூட முழுமையாக ஒரு இலட்சம் பிராங்க்ஸிஃபா கிடைக்கவில்லை. ஆனால் எனக்கு மூன்று இலட்சம் பிராங்க் ஸிஃபா கிடைத்துள்ளது. இது முழுக்க முழுக்க உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியதன் விளைவேயாகும் என்று கூறி விட்டு அப்போதே இவர் அதிலிருந்து 20,000 பிராங்க்ஸிஃபாவை எடுத்து அதை சந்தாவாக செலுத்தி விட்டார்.

**கேம்பியாவின் இன்னொரு உதாரணத்தைக் கூறுகின்றேன். அமீர் சாஹிப் கூறுகின்றார்கள்:**

ஒரு நாள் குத்து திராவலே சாஹிப் என்ற சகோதரர் எனது அலுவலகத்திற்கு வந்து நான் ஆயிரம் டிலாஸி சந்தாவாக கொடுக்க விரும்புகின்றேன் என்று கூறினார். மேலும் நான் மக்களிடம் வாங்கிய கடனைக் கொடுக்காமல் பாக்கி வைத்துள்ளேன். ஆனால் இறைவனுக்குக் கொடுக்க வேண்டிய கடனைக் கொடுக்காமல் இருக்க மாட்டேன் என்று கூறினார்.

இந்த சகோதரர் ஏழையாகவும் தேவையுடையவராகவும் இருந்தார். தனது குடும்பத்திலுள்ளவர்களை மிகுந்த கஷ்டத்துடன் கவனித்து வந்தார். ஆனால் பொருள் தியாகம் செய்வதில் எப்போதும் அமைப்புக்குக் கட்டுப்பட்டு நடந்து வந்தார். ஏதாவது கொடுப்பதற்கு எல்லா சமயமும் தயாராக இருந்து வந்தார். அவர் சிறிது காலம் கழிந்த பிறகு என்னிடம் கூறினார். அவர் ஆயிரம் டிலாஸி சந்தாவாக செலுத்திய பிறகு கொஞ்ச நாட்கள் தான் கழிந்தன. இந்நிலையில் அவருக்கு அதிகமான தொகை எங்கிருந்தோ கிடைத்தது.

எப்போது இறைவழியில் தியாகம் செய்தாலும் இறைவன் அதற்கேற்ப அல்லது அதை விட அதிகமாக அருள் செய்கின்றான் என்பது எனது ஈமானாகும் என்று இவர் கூறுகின்றார்.

இதுதான் தனது நேசம், தனது ஆசைகள் ஆகியவற்றிற்கு எதிரில் இறைவனுக்கு முன்னுரிமை வழங்குவது என்பதாகும்.

பல்வேறு நாடுகள் தொடர்பாகவும் சில விஷயங்களைத் தான் நான் கூறியுள்ளேன். எண்ணற்ற விஷயங்கள் அறிக்கைகளில் வருகின்றன.

**போர்கீனி (Borkeni) -ன் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

குமாரா சாஹிப் தூய அஹ்மதியாக இருக்கின்றார். ஆனால், பொருளாதார ரீதியாக பலவீனமானவராக இருந்தார். தஹ்ரீகே ஜதீது சந்தாவை வசூல் செய்வதற்காக இவரது கிராமத்திற்குச் சென்ற சமயத்தில் இவருக்கு கொஞ்சம் பாக்கி இருப்பது எனக்கு தெரிய வந்தது. வருடமும் முடிவடையப் போகிறது. இவர்களது வீட்டின் நிலையை இங்கிருந்தவாறு நாம் கணித்துவிட முடியாது.

நான் இவரது வீட்டிற்குச் சென்ற போது 20 கப் அரிசி வாங்குவதற்கான தொகை மட்டுமே என்னிடம் இருக்கின்றது. இதன் மூலமே நாளை மாலை வரை எனது வீட்டில் உள்ளவர்களின் உணவிற்கான ஏற்பாட்டைச் செய்ய முடியும் என்று கூறினார்.

அதாவது அவரிடம் இருந்த தொகையை வைத்து தான் அவரது வீட்டில் உள்ளவர்களுக்கு அடுத்த ஒருநாள் வரையிலான உணவிற்கான ஏற்பாட்டை அவரால் செய்ய முடியும். வேறு எங்கிருந்தும் தொகை கிடைப்பதற்கான எந்த நம்பிக்கையும் அவருக்கு கிடைக்கவில்லை.

அவர் கூறினார்: ஆனால், நான் எனது பாக்கியை செலுத்துவதற்காக இந்தத் தொகையினை இப்போது தந்து விடுகின்றேன்.

அவருக்கு எதைப் பற்றியும் கவலை இருக்கவில்லை.

அல்லாஹ் தாமாகவே நமது உணவிற்கான ஏற்பாட்டைச் செய்வான் என்று நான் எனது மனைவி மக்களிடம் கூறி விட்டேன் என்று இவர் கூறினார்.

தொடர்ந்து இவர்கள் கூறுகின்றார்கள்: அதே இரவில் இவரது சகோதரி ஒருவர் இன்னொரு கிராமத்திலிருந்து ஒரு மூடை அரிசியை அன்பளிப்பாக இவருக்கு அனுப்பி இருந்தார். இவ்வாறு அல்லாஹ் இவருக்கான ஏற்பாட்டைச் செய்தான்.

**ஐவரிகோஸ்டின் முபல்லிக் கூறுகின்றார்கள்:**

புதிதாக பைஅத் செய்த ஒரு காதிமான ஹாரூன் சாஹிப் அவர்கள் சாந்த்ரா என்ற நகரத்தில் முட்டை வியாபாரம் செய்து வந்தார். உள்ளூர் முஅல்லிம் தர்பிய்யத் சென்டருக்கு சென்று இவர் தர்பிய்யத் பெறுவது தொடர்பாக கவனமூட்டியபோது இவர் அதற்காக தயாராகியவாறு தனது இன்னொரு நண்பருடன் தர்பிய்யத் சென்டருக்குச் சென்றார். அங்கு மூன்று மாதத்திற்கான கோர்ஸைப் படித்தார். அஹ்மதிய்யத் தொடர்பான தனது அறிவை மேலும் விரிவானதாக ஆக்கிக் கொண்டார். அல்லாஹ்வின் பணிக்காக நான் செல்கின்றேன் என்று நினைத்தவாறு தனது வியாபாரத்தை அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தவாறு தனது தம்பியிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றார். இந்த வியாபாரம் சீர்குலைவதற்கு அல்லாஹ் விட்டு விடமாட்டான் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. 3 மாதக் கோர்ஸைப் படித்து முடித்து விட்டு அவர் திரும்பி வந்த சமயத்தில் எனது வியப்பிற்கு எல்லையே இல்லை. இந்த காலக்கட்டத்தில் வழக்கத்திற்கு மாற்றமாக வியாபாரத்தில் ஒருபோதும் இந்த அளவு இலாபம் கிடைக்கவில்லை என்று இவர் கூறுகின்றார்.

பிறகு இவர் தனது சந்தாவை அதிகப்படுத்தி 500 பிராங்கிலிருந்து ஆயிரம் பிராங்க் ஆக ஆக்கியுள்ளார். பிறகு அல்லாஹ் அதில் மேலும் பரக்கத்தை வழங்கினான். அதனால் மேலும் அவர் சந்தா தொகையை அதிகமாக்கினார். இப்போது ஒவ்வொரு மாதமும் 4,000 பிராங்க்கை இவர் சந்தாவை செலுத்தி வருகின்றார். தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் சந்தாக்களில் தான் மட்டும் பங்கு பெறுவதுடன் இருந்து விடாமல் தனது மர்ஹூமீன்களாக பெற்றோர்களை அவர்கள் அஹ்மதிகளாக இல்லாத போதும் கூட அவர்களை இந்த சந்தாக்களில் இவர் பங்கு கொள்ள வைத்துள்ளார். இவர் புதிதாக பைஅத் செய்தவராவார். இவரது பெற்றோர்கள் அஹ்மதி ஆகவில்லை. அவர்கள் தரப்பிலிருந்தும் இவர் சந்தா கொடுத்து வருகின்றார்.

**புர்கினோஃபாஸோவின் அமீர் சாஹிப் கூறுகின்றார்கள்:**

போபோ என்ற நகரத்தைச் சார்ந்த புதிதாக பைஅத் செய்த சகோதரர்கள் தராவே சல்மான் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:

ஜுமுஆ குத்பாவில் வக்ஃபே ஜதீதின் முக்கியவத்தைப் பற்றி கேட்ட பிறகு என்னால் முழு இரவும் தூங்க முடியவில்லை. ஜமாஅத் அப்படிப்பட்ட பெரும் பணிகளைச் செய்கிறது. ஆனால் நம்மால் இப்பணிகளில் முழுமையாக பங்குகொள்ள முடியவில்லை என்று நினைத்தேன்.

அதற்கடுத்த நாள் 4,500 பிராங்க்ஸிஃபாவை வக்ஃபே ஜதீத் சந்தாவாக செலுத்தி விட்டு அவர் சென்றார்.

ஆனால், அடுத்த நாள் இரவையும் மிகவும் நிம்மதியிழந்த நிலையில் கழித்தார். பிறகு அடுத்த நாள் காலையில் மிஷன் ஹவுஸிற்கு வந்தார். பிறகு மீண்டும் 4,500 பிராங்க் ஸிஃபாவை அவர் செலுத்தினார். இப்போதுதான் நான் நிம்மதியாக இருக்கின்றேன் என்று இவர் கூறுகின்றார்.

**சுவிட்சர்லாந்தின் முபல்லிக் இன்சார்ஜ் எழுதுகின்றார்கள்:**

நைஜீரியாவைச் சேர்ந்த நமது ஆப்பிரிக்க அஹ்மதி சகோதரர் இத்ரீஸ் சாஹிப் அவர்கள் சர்வதேச நிறுவனம் ஒன்றில் வேலை செய்து வந்தார். இவர் சுவிட்சர்லாந்து வந்த சமயத்தில் ஒரே நேரத்தில் 9,000 பிராங்க் ஸிஃபா பள்ளிவாசலுக்கான கணக்கில் அனுப்பி வைத்தார். அத்துடன் தனது தொலைபேசி எண்ணையும் எழுதியிருந்தார். இது புதிய எண்ணமாக இருந்ததால் இவர் அஹ்மதியா? அல்லது இவர் யார்? என்பதை தெரிந்து கொள்ள தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட போது இவ்வளவு பெரிய தொகையை நீங்கள் கணக்கில் போட்டுள்ளீர்கள். இது ஏன்? என்று முபல்லிக் சாஹிப் கேட்ட போது, அவர் நான் இங்கு வந்து மூன்று மாதங்களாகி விட்டது. அதாவது சுவிட்சர்லாந்து வந்து மூன்று மாதங்களாகி விட்டது என்று கூறினார். அப்படியானால் மூன்று மாதங்களுக்கான சந்தாவைக் கொடுத்தால் அது போதுமானது. இவ்வளவு பெரிய தொகை மூன்று மாதங்களுக்கான சந்தாவாக இருக்க முடியாது என்று முபல்லிக் சாஹிப் கூறினார்.

அப்போது அவர் அதற்கு, நான் கடந்த ஆறு மாதங்களாக ஜமாஅத் இல்லாத ஓரிடத்தில் இருந்து வந்தேன். அந்தக் காலக்கட்டத்திற்கான சந்தா பாக்கி எனக்கு இருந்தது. இதனால்தான் நான் இந்த பெரும் தொகையை அனுப்பியுள்ளேன் என்று கூறினார்.

இதுதான் இந்த மக்களின் ஈமானின் தரமாகும். அடியாருக்கு இதுபற்றி தெரியா விட்டாலும் அல்லாஹ்விற்கு இதுபற்றி தெரியும் என்பதால் எல்லா நேரமும் இறைவனிடம் தனது கணக்கை இவர்கள் சரியாக வைத்துக் கொள்கின்றனர்.

பாகிஸ்தானைச் சேர்ந்த ஓர் அஹ்மதி சகோதரர் சுவிட்சர்லாந்தில் ஒரு கம்பெனியில் பணிபுரிந்து வந்தார். அவர் சந்தா கொடுப்பதற்காக 5,000 பிராங்க் ஸிஃபாவிற்கான வாக்குறுதி எழுதியிருந்தார். கம்பெனி தரப்பிலிருந்தும் 5,000விற்கான போனஸ் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. பிறகு அத்துடன் போனஸ் கிடைக்கும் போது அதிலிருந்து தனது சில தேவைகளுக்காகவும் செலவு செய்ய வேண்டும் என்று இவர் எண்ணினார். ஆனால், சந்தாவிற்கான வாக்குறுதி நான் இவ்வளவு தொகை எழுதியுள்ளேன். அதை செலுத்த வேண்டிய நேரமும் மிக அருகில் வந்து விட்டது என்று தெரிந்ததும் வாக்குறுதி செய்திருந்த தொகையை அவர் சந்தாவாக கொடுத்து விட்டார். தனது தேவைகளைப் பின்னால் தூக்கி எறிந்து விட்டார். பிறகு அவர் கூறினார். அல்லாஹ் அவர் மீது எவ்வாறு அருள் செய்தான் என்றால் அவர் வேலை செய்த நிறுவனத்தில் இருந்தும் 5000 ற்கான போனஸிற்குப் பதிலாக இரு மடங்காக அவருக்கு போனஸ் வழங்கப்பட்டது. இவ்வாறு இதன் மூலமாக அவரது சொந்தத் தேவைகளையும் அவரால் நிறைவேற்ற முடிந்தது. வக்ஃபே ஜதீது சந்தாவிற்காக அவர் செய்திருந்த வாக்குறுதியையும் அவரால் நிறைவேற்ற முடிந்தது.

**பெனின் ஜமாஅத்தின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

ஓரிடத்தில் நமது முஅல்லிம் தஹ்ரீகே ஜதீது சந்தாவை வாங்குவதற்காக சென்றார். அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்கள் 3,100 பிராங்க்ஸிஃபா சந்தா கொடுத்து விட்டு துஆ செய்யுங்கள். அல்லாஹ் மேலும் எனக்கு கூடுதலாக வருமானத்தை அனுப்பினால் நான் மேலும் அதிகமாக சந்தா அனுப்புவேன் என்று கூறினார். இறைவனது செயல் எவ்வாறிருந்தது என்றால் அதே வாரத்தில் லத்தீஃப் சாஹிப் அவர்கள் நமது முஅல்லிமை அழைத்து மேலும் கூடுதலாக 7,000 பிராங்க்ஸிஃபா சந்தாவாக கொடுத்தார். எந்த நாளில் நான் உங்களிடம் 3100 பிராங்க் ஸிஃபாவை சந்தாவாக கொடுத்தேனோ அதே நாளில் ஒரு நோயாளி என்னிடம் வந்தார். அவருக்கு நான் சிகிச்சை அளித்த பிறகு அதற்குரிய கூலியாக அவர் எனக்கு 34,000 ற்கான தொகையை எனக்கு தந்தார். அதற்குப் பிறகு நான் திரும்பிச் செல்வதற்கான பயணத் தொகை என்னிடம் இல்லை என்று கூறியவாறு என்னிடமிருந்து 3000 பிராங்க்ஸிஃபாவைப் பெற்றுக் கொண்டு 31,000 பிராங்க்ஸிஃபாவை எனக்கு தந்தார். அப்போது எனது உள்ளம் உண்மையிலேயே எனது இறைவன் நான் வழங்கியதற்கு எதிரில் அதை பத்து மடங்காக எனக்கு திருப்பித் தந்துள்ளான் என்று சாட்சி கூறியது. அதாவது 3,100க்கு பதிலாக 31,000த்தை அவன் வழங்கியுள்ளான். இதனால்தான் நான் இப்போது எனது சந்தாவை அதிகமாக்கியவாறு உங்களுக்கு 7000 பிராங்க் ஸிஃபாவை அனுப்பியுள்ளான் என்று கூறினார்.

**இவ்வாறே லிபேரியாவிலுள்ள நமது முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

நாங்கள் ஓரிடத்திற்கு சுற்றுப் பயணம் சென்றோம். அப்போது அந்த இடத்தில் 8 வயது சிறுவர் ஒருவர் தண்ணீர் கொண்டு வருவது, பையை அதற்குரிய இடத்தில் வைப்பது போன்ற வீட்டுப் பணிகளைச் செய்து வந்தார். அங்குள்ள சிறுவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் முபல்லிக்குகளுக்கு தொண்டு செய்கின்றார்கள். முரப்பி சாஹிப் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்து அந்த சிறுவனுக்கு 5 லிபேரியன் டாலரைப் பரிசாக வழங்கினார்கள். இந்த டாலர்களுக்கு பெருமதிப்பு இருந்தது.

தொழுகைக்குப் பிறகு முரப்பி சாஹிப் தஹ்ரீகே ஜதீத் சந்தா செலுத்துவதன் பக்கம் ஜமாஅத் சகோதரர்களுக்கு கவனமூட்டினார். குறிப்பாக குழந்தைகளையும் இதில் பங்கு பெற வைக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியதைக் கேட்டதும் அதே சிறுவர் எழுந்து தனது தந்தையின் காதில் நானும் சந்தா கொடுக்க வேண்டும். என்னிடமும் தொகை இருக்கின்றது என்று கூறினார். உன்னிடம் தொகை இருந்தால் கொடுத்து விடு என தந்தையார் கூறியதும் தனக்கு கிடைத்த அதே 5 டாலரை அவர் சந்தாவாக கொடுத்து விட்டார். இந்த சிறுவனிடம் ஏற்பட்ட இந்த உணர்வானது மற்ற குழந்தைகளிடமும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்த குழந்தைகளும் தங்களது பெற்றோர்களிடமிருந்து தொகையைப் பெற்று தங்களையும் இந்த இடத்தில் இணைத்துக் கொண்டார்கள்.

**கிர்கிஸ்தானின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

புதிதாக பைஅத் செய்த ஒரு சகோதரர் ஏறக்குறைய 3 வருடங்களுக்கு முன்பு இவர் பைஅத் செய்திருந்தார்.

2008 ஆம் ஆண்டில் கிலாஃபத் ஜுபிளிக்கான விழா நடந்த சமயத்தில் தலைமையக வழிகாட்டலுக்கேற்ப உள்ளூர் அளவிலும் கொஞ்சம் தொகை வசூல் செய்யப்பட்டது. அப்போது இவரது சம்பளம் 66 டாலர் ஆக இருந்தது. ஏழை நாட்டைச் சேர்ந்தவராக இவர் இருந்தார்.

**முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

நமது முபல்லிக் பஷாரத் அஹ்மது சாஹிப் அவர்கள் இவரிடம் நீங்களும் கிலாஃபத் ஜுபிளிக்கான வாக்குறுதியை எழுதுங்கள் என்று கூறியதும் அவர் 44 டாலர் வாக்குறுதியாக எழுதினார். பிறகு அவருக்கு சம்பளம் கிடைத்தவுடன் அவர் நேரடியாக மிஷன் ஹவுஸிற்கு வந்து தான் வாக்குறுதி செய்த தொகையை நான் கொடுக்காமல் வீட்டிற்குச் சென்றால் இந்தத் தொகை செலவாகி விடும். அதனால் தான் முதலிலேயே இதை கொடுக்கின்றேன் என்று கூறிவிட்டு மீதியிருந்த 22 டாலர்களை வீட்டிற்கு எடுத்துச் சென்றார். 44 டாலர்களை

சந்தாவாக செலுத்தியிருந்தார். அல்லாஹ் அவரது மனத்தூய்மைக்கு மிகவும் கண்ணியம் அளித்தான். சிறிது காலம் கழிந்ததுமே அவருக்கு கூடுதலாக இன்னொரு வேலை கிடைத்தது. அந்த வேலை மூலமாக கூடுதலாக அவருக்கு 150 டாலர்கள் கிடைக்க ஆரம்பித்தது. இப்போது ஏறக்குறைய 3 மாதங்களாக ஒரு வெளிநாட்டு கம்பெனியில் அவர் பணியாற்றி வருகின்றார். அல்லாஹ்வின் அருளால் இப்போது அவரது மாத சம்பளம் 770 டாலர்களாகும். பிறகு இப்போது அவர் வஸிய்யத்தும் செய்து விட்டார். வஸிய்யத் செய்த பிறகு 16-ல் ஒரு பங்கு சந்தாவாக கொடுப்பதற்குப் பதிலாக பத்தில் ஒரு பங்கு சந்தாவாக கொடுக்க வேண்டும் என்று கூறிய போது அதைக் கேட்ட அவர் எந்த நாளில் நான் பைஅத் செய்தேனோ அந்த நாளிலிருந்தே நான் பத்தில் ஒரு பங்கைத்தான் சந்தாவாகக் கொடுத்து வருகின்றேன் என்று கூறினார்.

கிர்கிஸ்தானைச் சார்ந்த பெண் ஜில்தீஸ் சாஹிபா மிகுதியான தூய உள்ளம் கொண்டவராவார். இவர் பைஅத் செய்து ஒரு வருடம் ஆகின்றது. ஆனால், இந்தக் காலக்கட்டத்தில் இவர் சந்தா கொடுக்காமல் இருந்து வந்தார். அவருக்கு சந்தாவைப் பற்றி எடுத்துக் கூறி அதன் முக்கியத்துவம் தொடர்பாக விளக்கமாக அவருக்கு தெரிவிக்கப்பட்டதும், மேலும் எந்தெந்த சந்தாக்கள் கட்டாயச் சந்தாக்களாக இருக்கின்றன. எந்தெந்த சந்தாக்களை நீங்கள் உங்களது விருப்பத்திற்கேற்ப கொடுக்கலாம்? என்பதைப் பற்றியெல்லாம் அவருக்கு தெரிவிக்கப்பட்டது. பள்ளிவாசலில் வைத்து அவரிடம் இந்த விபரங்கள் கூறப்பட்டன. அடுத்த நாள் ஜமாஅத் தலைவரிடம் நான் உங்களைச் சந்திக்க விரும்புகின்றேன் என்று கூறினார். ஜமாஅத் தலைவர் அவர்கள் நான் இப்போது எனது பணி நிமித்தமாக வேறொரு இடத்திற்கு செல்கின்றேன் என்று கூறினார்கள். இதைக் கேட்ட அவர் இல்லை. நான் உங்களை உடனடியாக சந்திக்க வேண்டும் என்று கூறினார். பிறகு அந்தப் பெண் ஜமாஅத் தலைவரைச் சந்தித்து 15000 கிர்கிஸை சந்தாவாக அவரிடம் கொடுத்தார். ஜமாஅத் தலைவர் அவர்கள் இவ்வளவு பெரிய தொகையை ஏன் கொடுக்கின்றீர்கள்? என்று கேட்டதற்கு நான் முழுவதுமாக கணக்குப் பார்த்து விட்டேன். எனது ஒரு வருட வருமானத்திற்குரிய சந்தா இவ்வளவு தொகையாகும் என்று கூறினார். பல்வேறு திட்டங்களுக்கான சந்தாவை நான் செலுத்துகின்றேன் என்று அவர் கூறினார். ஒரு வருடத்திற்கான சந்தா தொகையை முழுமையாக அவர் செலுத்தினார்.

இதுதான் புதிதாக பைஅத் செய்த அஹ்மதிகளின் மனத்தூய்மை மற்றும் ஆழ்ந்த பற்று தொடர்பான சம்பவங்களாகும். இதன் மூலம் தியாகங்கள் செய்வதற்காக அவர்களிடம் எந்த அளவு உணர்வும், ஆர்வமும் உருவாகியுள்ளது என்பது தெரிய வருகிறது. இந்த சில சம்பங்களைக் கூறிய பிறகு இப்போது நான் வக்ஃபே ஜதீதின் புதிய வருடத்திற்கான அறிவிப்பைச் செய்கின்றேன். சில விபரங்களையும் எடுத்துக் கூறுகின்றேன்.

ஜனவரி 1 ஆம் தேதியிலிருந்து வக்ஃபே ஜதீதின் ஆண்டு ஆரம்பமாகி விடுகின்றது. வக்ஃபே ஜதீதின் 54வது வருடம் முடிவடைந்து 55வது வருடம் ஆரம்பமாகிறது. வக்ஃபே ஜதீத் சந்தாவில் அல்லாஹ்வின் அருளால் முழு உலகத்தின் தியாகமானது எனக்கு கிடைத்துள்ள அறிக்கைக்கேற்ப 46 இலட்சத்து 93 ஆயிரம் பவுண்டுகளைவிட அதிகமாக தொகை வசூலாகியுள்ளது. கடந்த வருட வசூலை விட 5 இலட்சத்து 16 ஆயிரம் பவுண்ட அதிகமாக இந்த வருடம் வசூலாகி இருக்கிறது. அல்ஹம்துலில்லாஹ். முன்னர் இருந்ததைப் போலவே பாகிஸ்தான் முதல் இடத்தில் இருக்கின்றது. அங்கு வாழ்வாதார நிலைமைகள் மிகவும் மோசமாக இருந்தும்கூட தியாகங்களில் அவர்கள் எவ்வித குறையும் வரவிடவில்லை. அல்லாஹ் அவர்களின் உயிர்களிலும் பொருள்களிலும் அளவற்ற பரக்கத்துகளை வழங்குவானாக! அவர்களை தமது பாதுகாப்பில் வைப்பானாக! ஒவ்வொரு தீங்கிலிருந்தும் அவர்களைக் காப்பாற்றி தனது அடைக்கலத்தின் கீழ் வைப்பானாக! இதற்குப் பிறகு அடுத்த இடத்தை அமெரிக்கா பெறுகின்றது. மூன்றாவது இடத்தை U.K. பெறுகின்றது. முதலில் U.K. இரண்டாவது இடத்தில் வந்துள்ளது என்ற எண்ணம் இருந்தது. ஆனால் அமெரிக்காவில் உள்ளவர்கள் தங்களது இறுதி அறிக்கையை எனக்கு அனுப்பியிருந்தார்கள். அதற்கேற்ப இதற்குப் பிறகு அவர்கள் U.K. யை கொஞ்சம் பின்னால் தள்ளியுள்ளார்கள். மிகக் குறைந்த வித்தியாசத்தில் அமெரிக்கா முன்னேறியுள்ளது. U.K. யை விட ஏறக்குறைய 11,000 பவுண்டுகள்தான் இவர்கள் அதிகமாக செலுத்தியுள்ளனர். முதலில் தயார் செய்யப்பட்ட லிஸ்டில் U.K. இரண்டாவது இடத்தில் தான் இருந்தது. ஆனால் இதற்குப் பிறகு எனக்கு வந்த அறிக்கைக்கேற்ப இவர்களுக்கு மூன்றாவது இடத்திற்குச் செல்ல வேண்டியது வந்து விட்டது. ஆனால், U.K. தனது சந்தாவில் வழக்கத்திற்கு மாற்றமாக பெரும் அதிகரிப்பைச் செய்துள்ளது.

அது மிகவும் வியப்பிற்குரியதாகும். அல்லாஹ் சந்தா கொடுக்கின்ற இந்த எல்லாரது பொருள்களிலும் உயிர்களிலும் அளவற்ற அருள்களை வழங்குவானாக! இங்கும் வாழ்வாதார நிலைமைகள் மோசமாகவே இருக்கின்றது. இவர்களுக்குப் பிற செலவுகளும் உள்ளன. சந்தாவும் கொடுக்க வேண்டும். பள்ளிவாசல்களைக் கட்டுவதன் பக்கமும் இவர்களுக்கு கவனம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறிருந்தும் கூட அல்லாஹ்வின் அருளால் தஹ்ரீகே ஜதீத் சந்தாவிலும், வக்ஃபே ஜதீத் சந்தாவிலும் U.K. ஜமாஅத் வழக்கத்திற்கு மாற்றமாக பெரும் அதிகரிப்பைச் செய்துள்ளது. இந்த விஷயத்திலிருந்தும் ஹத்தா துன்ஃபிகூ மிம்மா துஹிப்பூன் என்பதன் ஆன்மாவும் இவர்களுக்கு புரிந்து விட்டது என்பது தெரிகின்றது. மற்ற எல்லா அனைத்து வகையான நன்மைகளிலும் இந்த ஜமாஅத்தும், உலகிலுள்ள அனைத்து ஜமாஅத்துகளும் முன்னேறக்கூடியதாக இருக்கட்டுமாக! அல்லாஹ் அவ்வாறு செய்வானாக!

U.K. ன் லஜ்னா இதில் பெரும் பங்கு வகிக்கின்றது. தஹ்ரீகே ஜதீத் சந்தாவிலும் வக்ஃபே ஜதீத் சந்தாவிலும் இவர்கள் ஒரு பெரும் தூரத்தைக் கடந்து செல்வதற்காக குதித்து வந்துள்ளனர். அல்லாஹ் எல்லா சகோதரிகளுக்கும் சிறுமிகளுக்கும் இதற்கான நற்கூலியை வழங்குவானாக! மூன்றாவது இடத்தில் U.K. இருக்கின்றது. தொடர்ந்து 4) ஜெர்மனி 5) கனடா 6) இந்தியா 7) ஆஸ்திரேலியா 8) இந்தோனேஷியா 9) பெல்ஜியம் 10) சுவிட்சர்லாந்து இருக்கின்றது.

உள்ளூர் கரன்ஸியில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு என்பதன் அடிப்படையில் முதலிடத்தில் இந்தியா இருக்கின்றது. வழக்கத்திற்கு மாற்றமாக பெருமளவில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 36 சதவீதம் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு அடுத்த படியாக பெல்ஜியம் வருகின்றது. சிறிய நாடாக இருந்தும் இவர்கள் பெரிய ஜம்ப்பிங் செய்து முன்னேறியுள்ளார்கள். ஏறக்குறை 30 சதவிகிதம் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதற்குப் பிறகு ஆஸ்திரேலியா, அதற்கு அடுத்த படியாக U.K., அதற்கு அடுத்த படியாக இந்தோனேஷியா வருகின்றது.

தனிநபர் விகிதாச்சர அடிப்படையில் சந்தா செலுத்துவதில் அமெரிக்கா முதலிடத்தில் இருக்கின்றது. இதற்கு பிறகு சுவிட்சர்லாந்து, அதற்கு அடுத்த இடத்தில் U.K. பிறகு பெல்ஜியம், பிறகு அயர்லாந்து வருகின்றது. அமெரிக்கா சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யாத வரை சந்தாவில் அதிகரிப்பை ஏற்படுத்த முடியாமல் போய் விடும் என்று தெரிகிறது. ஆனால், U.K.ல் இதற்கான வாய்ப்பு இருக்கின்றது. அதனால் அதன் Position இன்னும் சிறப்பானதாக ஆக முடியும்.

ஆப்பிரிக்காவில் வசூலின் அடிப்படையில் முதல் 5 இடத்தை வகிக்கும் ஜமாஅத்துகளில் முறையே 1) கானா 2) நைஜீரியா 3) மொரீஸியஸ் 4) புர்கினோஃபாஸோ 5) உகாண்டா வருகிறது. இந்த வருடம் அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே ஜதீத் சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கையில் 90,000 நபர்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளனர். மொத்த எண்ணிக்கை ஆறு இலட்சத்தை எட்டியுள்ளது. இன்னும் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றது.

ஆப்பிரிக்காவில் உள்ளவர்களிடம் இந்த எண்ணிக்கையை மேலும் நீங்கள் அதிகரிக்கும்படி செய்ய வேண்டும் என்று நான் கூறியிருந்தேன். வகாலத்தே மால் அவர்களுக்கு இலக்கை நிர்ணயிக்கும். எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான இலக்கு கொடுக்கப்படும். புதிதாக வரக்கூடியவர்களை இந்த சந்தாக்களில் பங்கு பெற வைக்க வேண்டும். புதிதாக வரக்கூடியவர்களுக்கு ஆரம்ப நாட்களிலிருந்தே இதற்கான பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகுந்த கண்டிப்புடன் கூறியுள்ளார்கள். ஆப்பிரிக்காவிலுள்ள ஜமாஅத்துகள் இந்த விஷயத்தில் முயற்சி செய்தால் அங்கு பெருமளவிலான வாய்ப்புகள் உள்ளன. எண்ணிக்கையிலும் பெருமளவு அதிகரிப்பு ஏற்படும் இன்ஷா அல்லாஹ். வகாலத்தே மால் தரப்பிலிருந்து அவர்களுக்கு என்ன இலக்கு கொடுக்கப்பட்டாலும் அதனைப் பெறுவதற்கு அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். சந்தா கொடுப்பவர்கள் சொற்ப தொகையைக் கொடுத்தாலும் நபர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும்.

எண்ணிக்கையை அதிகப்படுத்துவதில் இந்த வருடம் நைஜீரியா, நைஜர், செரோலியோன், புர்கினோஃபாஸோ, செனிகல், பெனின் மற்றும் உகாண்டா ஆகிய நாடுகள் அதிகமாக முயற்சி செய்துள்ளது.

கானாவிற்கு இதுபற்றி நான் கூறியிருந்தேன். அவர்கள் மிகக் குறைவான முயற்சியைத்தான் செய்துள்ளார்கள். கானா தனது முயற்சியில் வேகமாக செயல்பட வேண்டும். பருவமடைந்தவர்களில் சந்தா கொடுப்பவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதல் இடத்தில் லாஹூர், பிறகு ரப்வா வருகிறது. பிறகு கராச்சி வருகின்றது.

பாகிஸ்தானில் மாவட்ட அளவில் முதல் பத்து இடத்திலுள்ள மாவட்டங்கள் முறையே 1) சியால்கோட் 2) ராவல்பிண்டி 3) இஸ்லாமாபாத் 4) பைசலாபத் 5) ஷேக்பூரா 6) சர்கோதா 7) குஜ்ரான்வாலா 8) உமர்கோட் 9) குஜராத் 10) பாவல்நகர் ஆகியவை வருகின்றன. பாகிஸ்தான் அத்ஃபால்கள் சந்தா கொடுப்பதில் முதல் மூன்று இடத்தை வகிக்கும் ஜமாஅத்துகளில் முதலாவது இடத்தில் லாஹூரும், இரண்டாவது இடத்தில் ரப்வாவும், மூன்றாவது இடத்தில் இஸ்லாமாபாத்தும், நான்காவது இடத்தில் பைசலாபாத்தும், ஐந்தாவது இடத்தில் ஷேக்பூராவும், ஆறாவது இடத்தில் குஜ்ரான்வாலாவும், ஏழாவது இடத்தில் உமர்கோட்டும், எட்டாவது இடத்தில் சர்கோதாவும், ஒன்பதாவது இடத்தில் நாரோவாலும், பத்தாவது இடத்தில் குஜராத்தும் வருகின்றது.

*(தொடர்ந்து ஹுஸூர் அவர்கள், வசூல் அடிப்படையில் முதல் 5 இடங்களைப் பிடித்துள்ள அமெரிக்க ஜமாஅத்துகளின் தர வரிசையையும், வசூலின் அடிப்படையில் யூ.கே. ஜமாஅத்துகளின் தர வரிசையையும், யூ.கே.யின் மண்டல அடிப்படையில் முதல் 5 இடங்களைப் பிடித்த ஜமாஅத்துகளின் தர வரிசையையும், கனடாவின் முதல் பத்து இடங்களைப் பெற்றுள்ள ஜமாஅத்துகளின் தர வரிசையையும் குறிப்பிட்டார்கள்.)*

இந்தியாவில் முதல் பத்து இடங்களைப் பிடித்துள்ள மாநிலங்கள்: 1) கேரளா 2) தமிழ்நாடு 3) ஜம்மு காஷ்மீர் 4) ஆந்திரபிரதேசம் 5) மேற்கு வங்காளம் 6) கர்நாடகா 7) பஞ்சாப் 8) ஒரிஸ்ஸா 9) உத்திரபிரதேசம் 10) மகாராஷ்டிரா மற்றும் டெல்லி.

வசூலின் அடிப்படையில் இந்தியாவில் முன்னணியில் இருக்கும் ஜமாஅத்துகள்: 1) காலிகட் 2) கருலாயி 3) கண்ணூர் டவுண் 4) காதியான் 5) ஹைதராபாத் 6) கோயம்புத்தூர் 7) கொல்கத்தா 8) சென்னை 9) பெங்களூர் 10) ரிஷிநகர் மற்றும் கருநாகப்பள்ளி.

வக்ஃபே ஜதீத் சந்தா செலுத்துவதில் எவர்கள் அதிகமாக முன்னேறியவாறு பங்கு பெற்றுள்ளார்களோ அல்லாஹ் அவர்களின் பொருள்களிலும் உயிர்களிலும் அளவற்ற அருள்களை வழங்குவானாக! இத்துடன் நான் ஏற்கனவே கூறியது போல் புதிய வருடத்திற்கான அறிவிப்பையும் நான் செய்கின்றேன்.

இவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் முன்பை விட அதிகமாக தியாகங்கள் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த தியாகங்களில் பரக்கத்துகளை ஏற்படுத்துவானாக! ஜமாஅத்தின் செல்வத்திலும் அல்லாஹ் அளவற்ற பரக்கத்துகளை ஏற்படுத்துவானாக! உலகில் ஏற்படும் நிலைமைகளை பார்க்கின்ற போது அல்லாஹ்வின் அருள்தான் ஜமாஅத்திற்கு தனது திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவதிலும், அதை முழுமையடையச் செய்வதிலும், அதில் மேலும் அழகை ஏற்படுத்துவதற்குரிய நல்வாயப்பையும் தருகின்றது. அது இல்லாமல் எதுவும் நடக்க முடியாது. எனவே துஆ செய்யும் போது செல்வத்தில் பரக்கத் ஏற்படுவதற்கு அதிகமாக துஆ செய்யுங்கள்.

தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். இந்த ஜனாஸா புகழ்பெற்ற நமது கவிஞர், கண்ணியமிக்க சான்றோராக இருந்த நமது கவிஞர் மதிப்பிற்குரிய அப்துல் மன்னான் நாஹிது சாஹிப் உடையதாகும். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபியாக ஹஸ்ரத் காஜா முஹம்மதீன் சாஹிப் உடைய மகனாவார்கள். 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் தேதி தமது 93வது வயதில் இவர்கள் வஃபாத் ஆகியுள்ளார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

அப்துல் மன்னான் சாஹிப் அவர்கள் காஷ்மீரிலுள்ள ஒரு கண்ணியமிக்க குடும்பத்தில் 1919 ஆம் ஆண்டு பிறந்தார்கள். இவரது தந்தையாரின் பெயர் காஜா முஹம்மதீனாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் முன்ஷி முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் சியால்கோட்டி அவர்கள் இவரது பாட்டனார் ஆவார்கள். ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி (ரலி) அவர்கள் நாஹிது சாஹிபின் தாயாரான ஹாகீமுதீன் சாஹிபாவின் மாமா ஆவார்கள். இவர்களது வீட்டில் தான்

இவர்களது தாயார் வளர்ந்து வந்தார்கள். காதியானில் இவர்கள் தங்கி இருந்ததால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வீட்டிற்கு இவர்கள் வந்து போயிருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை), ஹஸ்ரத் அம்மா ஜான் ஆகியோரின் அன்பிலிருந்தும் கனிவிலிருந்தும் இவர்களது தாயார் பெரும் பங்கைப் பெற்றுக் கொண்டார்கள்.

மதிப்பிற்குரிய நாஹீது சாஹிப் அவர்கள் ஜமாஅத்திலுள்ள பெரும்பாலார் அறிந்திருப்பது போன்றே புகழ்பெற்ற கவிஞராக இருந்தார்கள். இவர்களது கவிதைகளும் (கஸல்களும்) மிகவும் ஆழமான கருத்துக்களைக் கொண்டவையாக இருந்தன.

ஆரம்பக் கல்வியை இவர்கள் சியால்கோட்டில் பயின்றார்கள். 1940 ஆம் ஆண்டில் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் இவர்கள் B.A. படித்து முடித்தார்கள். 1941 ஆம் ஆண்டில் இவர்கள் M.A. படிப்பதற்கான அட்மிஷன் கிடைத்தது. ஆனால் அதற்கு முன்பே இவர்களுக்கு வேலை கிடைத்த போது இவர்கள் தமது படிப்பை விட்டு விட்டார்கள். 1942 ஆம் ஆண்டில் இவர்கள் இராணுவத்தில் சேர்ந்தார்கள். இதே துறையில் 1978 ஆம் ஆண்டு Deputy Controller Military Accounts என்ற பதவியில் இருந்த நிலையில் இவர்கள் ஓய்வு பெற்றார்கள். பல்வேறு இடங்களில் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு இவர்ளுக்கு கிடைத்தது. எங்கெல்லாம் இவர்கள் சென்றார்களோ அங்கு ஜமாஅத் பணிகளில் இவர்கள் பங்கு பெற்றார்கள்.

மிகவும் மெதுவாக செயல்படுகின்ற இயல்பை உடையவர்களாகவும், தாழ்மைக் குணம் மற்றும் பணிவின் வடிவமாகவும் அவர்கள் திகழ்ந்தார்கள். மிகச் சிறந்த கவிஞராக அவர்கள் இருந்தார்கள். ஆனால் தமக்குக் கீழுள்ள ஜுனியர் கவிஞர்களை அவர்கள் பெரிதும் உற்சாகப்படுத்தி வந்தார்கள். அவர்களுடன் மிகுந்த கண்ணியத்துடனும் மரியாதையுடனும் உரையாடுவார்கள். ஜமாஅத் கவியரங்குகளில் முக்கியமாக பங்கேற்கக்கூடிய ஒருவராக அன்னார் இருந்தார்கள். மிக நல்ல மனிதராவார். இங்கு இரண்டு முறை வந்துள்ளார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் காலத்திலும் எனது காலத்திலும் நடைபெற்ற கவியரங்குகளில் இவர்கள் பங்கு பெற்றார்கள். பைஅத் நிபந்தனைகளுக்கு ஏற்ப செயல்பட இவர்கள் முயற்சி செய்து வந்தார்கள். நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றைப் பாதுகாப்பது, நேர்மை ஆகியவற்றின் சிறந்த உதாரணமாக இவர்கள் திகழ்ந்தார்கள். தொழுகை, நோன்பு ஆகியவற்றைப் பேணக் கூடியவர்களாகவும் முறையாக தஹஜ்ஜுது தொழுபவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள். ஏழைகளுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வதுடன் அவர்களுடன் சிறந்த முறையில் பரிமாறினார்கள். கலீஃபாக்கள், ஜமாஅத்திலுள்ள சான்றோர்கள் ஆகியோருக்கு மிகுந்த கண்ணியமளிப்பவராகவும், அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கு மிக அதிகமாக கட்டுப்பட்டு நடப்பவராகவும் அவர்கள் இருந்தார்கள். ஜமாஅத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வதில் முதல் அணியில் நிற்பவராக அவர் திகழ்ந்தார். ஜமாஅத்தின் பொருளாதாரத் திட்டங்களில் ஆர்வத்துடன் பங்கு பெறுபவராக அவர்கள் இருந்தார்கள். சுருக்கமாகக் கூறுவதென்றால், சுயநலமற்ற மனிதராக அவர் இருந்தார்கள். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக! இவரது மனைவி முதலில் வஃபாத் ஆகி விட்டார்கள். இவர்களுக்கு எந்த சந்ததியும் இருக்கவில்லை. இவர்களுக்கு ஒரு வளர்ப்பு மகன் இருந்தார். அவருக்கு இவர்களது நிழலின் கீழ் வளர்ந்து வந்ததனால் அவரிடம் ஏற்பட்டுள்ள தாக்கத்தை எப்போதும் நிலைத்திருக்கச் செய்வானாக! அல்லாஹ்வின் அருளால் அவருக்கும் ஜமாஅத்திற்கும் தொண்டாற்றக்கூடிய நல்வாய்ப்பு கிடைத்து வருகிறது. அல்லாஹ் எப்போதும் மனத்தூய்மையுடனும் பற்றுடனும் இவருக்கும் இவரது பிள்ளைகளுக்கும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றக்கூடிய நல்வாய்ப்பும் வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 06.01.2012**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456